## கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## அசல் வழக்கு எண். 244/2022
## நாள் 06/04/2026 திங்கட்கிழமை

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – அனிதா (DW1) | க/பெயர் – செல்வம் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கு என் மீது யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் பெயர் ஞாபகம் இல்லை. வாதியிடம் நான் பணம் வாங்கியது உண்மை என்றால் சரிதான். அவரிடம் பணம் வாங்குவதற்காக நிலத்தை அடமானம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல, ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன். நான் வாதியிடம் 2,10,000/– ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு எனக்கு சொந்தமான நிலத்தை அவருக்கு 11.02.2015 ம் தேதியன்று அடமான பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் தான் எழுதி கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நான் கும்மிடிப்பூண்டு பதிவாளர் அலுவலத்தில் எழுதி பதிவு செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. வாதியிடம் வாங்கிய கடனிற்கு 100 ரூபாய்க்கு மதாம் ரூபாய் 2 வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான்.

மேற்படி கடனை 3 மாதத்தில் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான், ஆனால் திருப்பி கொடுக்க இயலவில்லை. வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியவரை அவருக்கு பணம் எதுவும் திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 5 மாதங்கள் வரை வட்டி பணம் கொடுத்துள்ளேன். அதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை அவர் என் வீட்டில் வந்து வாங்கி சென்றார்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**